0S.No. 117/2022

Date : 24.11.2025

Witness Name & Rank – சுமித்ரா - DW1

**சாட்சி அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

1. 29.03.1963 தேதியிட்ட பாகப்பிரிவினையின்படி சி அட்டவணை சொத்து தான் இந்த வழக்கு சொத்து என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தைக்கும் இறந்து போன சுப்புலட்சுமி அவர்களுக்கும் வாய்மொழியாக பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லி உள்ள நிலையில் குறிப்பிட்டு எந்த தேதியில் வாய்மொழி பாகம் பிரிக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் தேதி தெரியாது, ஆனால் டிசம்பர் மாதம் பேசிக் கொண்டனர். எனது தந்தையின் மூன்றில் ஒரு பாகமும் அதே போல் இறந்து போன பாலசுப்பிரமணியத்தின் மூன்றில் ஒரு பாகமும் சேர்த்தால் 2.70 ஏக்கர் பூமி வராது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் வாய்மொழி பாகம் எதுவும் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்குப்படி வழக்கு சொத்தானது இதுவரை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கூட்டு அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் எனது தந்தைக்கு பாகம் ஒதுக்கி எனது தந்த ஆனால் பட்டா மற்றும் கூட்டு பட்டாவாக உள்ளது.
2. எனது தந்தை மறையும் வரை தாவா சொத்தில் எந்த விதமான உட்பிரிவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி தந்தை இறக்கும் வரை வழக்கு சொத்தில் எந்த ஒரு வாய்மொழியான பாகமும் செய்து கொள்ளாததால் தான் எந்தவிதமான உட்பிரிவும் வில்லங்கமும் ஏற்படுத்தாமல் இருந்தது என்றால் சரியல்ல. எனது தந்தை மறைந்த பிறகு தவறான லாபம் அடைய வேண்டி நாங்களும் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகளும் வழக்கு சொத்தில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொண்டு உட்பிரிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி நான் சொன்னது போல் எந்தவிதமான வாய்மொழி பாகமும் ஏற்படுத்தப்படவில்லை எனவே அவ்வாறு வாய்மொழி பாகம் ஏற்படுத்திக் கொண்டதாக

நாங்கள் தயாரித்த 26/8/2021 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல மேற்படி வழக்கு சொத்தில் வாதிகளுக்கும் சம பங்கு உள்ளதால் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

3. மேலும் வாதிகளின் சம்மதம் இல்லாமல் வருவாய்த்துறையினர் வழக்கு சொத்தில் உட்பிரிவு செய்தது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்றால் சரியல்லமேற்படி வழக்கு சொத்தில் இதுவரை எந்தவிதமான வாய்மொழி பாகமும் செய்து கொள்ள வில்லை அதே போல் வாதிகளுக்கு வழக்கு சொத்தை உரிய பாகம் உள்ளது பலமுறை வாதிகள் பாகப்பிரிவினை செய்து கொள்ள அறிவுறுத்தியும் நாங்கள் பாகப்பிரிவினைக்கு ஒத்துழைக்காததால் வாதி இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் எனவே வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.